முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆம் நாள் புதன்கிழமை

**இடைநிலை மனு எண்.03/2025**

**IN**

**அசல் வழக்கு எண்.199/2017**

காந்திமதி ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. இருதாலய மருதையா பாண்டியன்
2. முத்துமயில் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 24.07.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கனகராஜா அவர்கள் ஆஜராகியும், மனு. எதிருரை மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 26, விதி 9–ன் படி, மனு தபசில் சொத்தையும், அதனை சுற்றியுள்ள சொத்துக்களின் அமைப்புகளையும், அங்க அடையாளங்களையும் மற்றும் இருப்பு தன்மைகளையும், நீதிமன்ற ஆணையர் உபய தரப்பினர்களுடன் நகர சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு அளந்து இந்நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்துகொள்ள நீதிமன்ற ஆணையர் நியமித்து உத்தரவிட வேண்டி மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.17 16:35:29 +0530

2. <u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்</u> :—

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், மனுதாரர் அசல் வழக்கில் பிராதின் தபசில் சொத்தில் இருந்து வடக்கே உள்ள சங்குபுரம் 4ம் தெருவுக்கு சென்றுபோய்வரும் உரிமை உண்டு என விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்கள் மீது தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்மனுதார்களில் 1ம் எதிர்மனுதாரர் தனக்கு சங்குபுரம் 4ம் தெருவிற்கு சென்று போய்வரும் உரிமையை மறுத்து, எதிர்கோரிக்கையும், 2ம் எதிர்மனுதாரர் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், பிராதின் தபசிலாக காட்டப்பட்டுள்ள இதன் மனு தபசில் சொத்து காலிமனையாக ஆதியில் வடிவேல் நாடார் மனைவி ராஜாத்தி, கே.வி.கண்ணன் மனைவி ராமதேவி ஆகியோர்களுக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டு இருந்த சொத்தாகும் என்றும், மேற்படியார்கள் இருவரும் 24.08.2005 தேதிய பதிவு பவர் ஆவணத்தை கண்ணன் என்பவருக்குப் பிறப்பித்துக் கொடுத்திருந்தார்கள் என்றும், ஆகவே மேற்படி கண்ணன் மேற்படி பவர் ஏஜெண்ட் நிலையில் மனுதாரரிடம் சரியான பிரதிபிரயோசனத்தைப் பெற்றுக்கொண்டு 12.12.2007 தேதிய பதிவு கிரைய ஆவணம் மூலம் பிராதின் தபசில் சொத்தை மனுதாரருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றும், கிரைய காலம் முதல் பிராதின் தபசில் சொத்தை மனுதாரர் அடைந்து அனுபவித்து வருவதாகவும், மனுதாரர் மனு தபசில் சொத்தை காலிமனையாக கிரையம் பெற்ற பின்பு, அந்த இடத்தில் தெற்கு முகமாக பிரதான வாசலையும், வடக்கு முகமாக வீட்டின் பின் வாசலையும், அமைத்து வீடு கட்டி, அந்த வாசல்கள் வழியே தனது வீட்டிற்கு சென்று போய் தன்னுடைய வீட்டை அனுபவித்து வருவதாகவும், மனு தபசில் சொத்தில் உள்ள வீட்டிற்கு சங்கரன்கோவில் நகராட்சியில் சொத்துவரியும், தன் பெயரில் ஏற்பட்டு அதை தான் செலுத்தி அனுபவித்து வருவதாகவும், மனு தபசில் சொத்தில் உள்ள வீட்டிற்கு தன் பெயரில் மின் இணைப்பு எண்.040—012—1414 பெறப்பட்டுள்ளது என்றும், மனு தபசில் சொத்தை சர்வ சுதந்திரமாக தான் அனுபவம் செய்து வருவதாகவும், மனு தபசில் சொத்திற்கு அடுத்த வடக்கே 16 அடி அகல பொது சாலை இருந்து வருகிறது என்றும், அந்த சாலை சங்கரன்கோவில் நகராட்சியில் இருந்து சிமெண்ட் கல்தள சாலை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், அந்த

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.17 16:35:36 +0530

சாலையின் தெற்கு ஓரத்தில் தனது வீட்டிற்கு வடபுறம் நகராட்சியால் கழிவு நீர் வாறுகாலும், ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், மேற்படி தெருவில் மின் கம்பங்கள் சாலைகளில் நடப்பட்டு அவைகளில் இருந்து அப்பகுதி வாழ்மக்களின் வீடுகளுக்கு மின் இணைப்புகளும் கொடுக்கப்பட்டு உள்ளது என்றும், மேற்படி கிழமேல் பொது சாலைக்கு சங்கரன்கோவில் நகராட்சியில் சங்குபுரம் 4ம் தெரு எனவும் பெயர் சூட்டப்பட்டுள்ளது என்றும், தன் வீட்டிற்கு தெற்கேயுள்ள கிழமேல் பொதுபாதைக்கு சங்குபுரம் 3ம் தெரு என்று பெயரும் ஏற்பட்டுள்ளது என்றும், மேற்படி தெருக்களையும், தனது வீட்டையும் காண்பிக்கக்கூடிய புகைப்படங்கள் அதற்கான குறுந்தகடும் பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதனை சான்றாவணங்களாக குறியீடு செய்ய இயலவில்லை என்றும், மனு தபசில் சொத்திற்கு அடுத்த வடக்கே 16 அடி அகல பொதுபாதை உள்ளதால், அந்த சாலைக்கு மனு தபசில் சொத்தின் எப்பகுதியில் இருந்தும், சென்றுபோய் வந்து கொள்ளும் உரிமை தனக்கு சட்டப்படி உண்டு என்றும், அதை தடுக்க எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றும், தான் மனு தபசில் சொத்தில் வீடுகட்டி குடியேறி விட்டதால், பொறாமை கொண்டு 1ம் எதிர்மனுதாரர் தனது வீட்டின் வடபுறம் உள்ள சங்குபுரம் 4ம் தெருவிற்கு போய் வரக்கூடாது என்று தடுத்து இடையூறு செய்ய முற்பட்டதால், இவ்வழக்கை முதலில் 1ம் எதிர்மனுதாரர் மீது தான் தாக்கல் செய்திருந்ததாகவும், 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை 2ம் எதிர்மனுதாரருக்கு 14.05.2013ம் தேதிய பதிவு நன்கொடை ஆவணம் பிறப்பித்து வைத்துள்ளதாகவும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கிற்கு அவசியகட்சி என கட்சி செய்துள்ளதின் அடிப்படையில் 2ம் எதிர்மனுதாரர் புதிதாக இவ்வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், இவ்வழக்கில் தனது தரப்பில் மேல்சாட்சிக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கில் தான் கோரும் பரிகாரத்தை நிரூபிக்கும் பொறுப்பு தனக்கு இருந்து வருவதால், இவ்வழக்கு சொத்தின் அமைப்பு மற்றும் இருப்புத்தன்மை ஆகியவைகளை நீதிமன்ற ஆணையர் நகர சர்வேயர் உதவி மூலம் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்யும்பட்சத்தில் உண்மை நிலையை இந்நீதிமன்றம் அறிந்து ஒரு நிரந்தரமான தீர்வை மனுதாரர் இந்நீதிமன்றத்தில் பெற இயலும் என்றும், 1ம் எதிர்மனுதாரர் தனது எதிர்வழக்குரை பக்கம், பாரா 14ல்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.17 16:35:44 +0530

வழக்கு சொத்தின் தற்போதைய இருப்பு தன்மையை பார்வையிட்டால் உண்மைநிலை தெரியவரும் என கூறியுள்ளார் என்றும், 2ம் எதிர்மனுதாரர் தான் கோரியுள்ள பரிகாரத்திற்கு எதிர் பரிகாரமாக எதிர்கோரிக்கையில் பரிகாரம் கோரியுள்ளதால், நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து, சங்கரன்கோவில் நகர சர்வேயர் உதவியுடன் மனு தபசில் சொத்தை உபய தரப்பினர்களுடன் பார்வையிட்டு இந்நீதிமன்றத்தில் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்வதால், உபய தரப்பினருக்கும் நன்மை பயக்கக்கூடியதாக இருக்கிறது என்றும், ஆகையால், மனு தபசில் சொத்தையும், அதனை சுற்றியுள்ள சொத்துக்களின் அமைப்புகளையும், அங்க அடையாளங்களையும் மற்றும் இருப்பு தன்மைகளையும், நீதிமன்ற ஆணையர் உபய தரப்பினர்களுடன் நகர சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு அளந்து இந்நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்துகொள்ள நீதிமன்ற ஆணையர் நியமித்து உத்தரவிட வேண்டி மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-</u>

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர் தனது மனுவில் பாதையை பொறுத்து உரிமை கோரியுள்ள நிலையில் பாதை என்பது மனு தபசில் சொத்தாக இருந்து வரவில்லை என்றும், அவ்வாறு மனு தபசில் சொத்தாக இருந்து வராத இடத்தையும் அதேபோல் மனு தபசில் சொத்தாக காட்டப்பட்டுள்ள சுற்றுவட்டார பகுதிகளையும் அளவீடு செய்ய வேண்டும் என்றும் அதற்கு ஆணையர் நியமிக்க வேண்டுமென கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், அதேபோல் மனுதாரர் மனுவில் உரிமை கோருவதாக கூறியுள்ள பாதை என்பது அதாவது சங்குபுரம் 4ம் தெரு என நகராட்சியிலிருந்து வகைப்பாடு செய்யப்பட்டிருப்பதால் அதனை நகர அளவை ஆவணங்கள் மற்றும் வரைபடம் ஆகியவற்றின் மூலம் இந்நீதிமன்றத்தில் நிரூபித்துப் போக சட்டப்படி கடமை இருந்தும், அவ்வாறு ஆவணங்கள் தாக்கல் செய்து தனது

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.17 16:35:51 +0530

வழக்கை நிரூபிக்க சட்டப்படியான வாய்ப்புகள் இருந்தும் அவ்வாறு ஆவணங்கள் தாக்கல் செய்து மனுதாரர் தரப்பில் இவ்வழக்கினை நிரூபிக்காமல் மனுதாரர் தன்னுடைய வழக்கினை வழக்கு சொத்தாக காட்டப்படாத ஒரு சொத்தை பொறுத்து மனுதாரர் தரப்பில் நிரூபிக்கும் வகைக்காக ஆணையர் நியமிக்க கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்றாகும் என்றும், அதேபோல் மனுதாரர் வருவாய் ஆவணங்கள் மற்றும் பதிவு ஆவணங்கள் ஆகியவைகள் மூலம் தனது தரப்பு வழக்கினை நிரூபிக்க முடியாத சட்டப்படியான நிலை ஏற்படும்போது மட்டுமே நீதிமன்ற ஆணையர் நியமிக்க கோர முடியும் என்ற சட்டநிலை இருந்துவரும் நிலையில் மனுதாரர் மனுதாரருடைய மனுவில் 7 வது பாராவில் மனுதாரர் கோரும் பரிகாரத்தை நிரூபிக்கும் பொறுப்பு மனுதாரருக்கு இருந்துவருவதால் மனுதாரர் பாதையை பொறுத்து உரிமை கோரியுள்ளதாலும், மனு தபசில் சொத்தையும் அதனை சுற்றியுள்ள சொத்துக்களின் அமைப்புகளையும் அதன் அங்க அடையாளங்களையும் மற்றும் இருப்பு தன்மைகளையும் நீதிமன்ற ஆணையர் நகர சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு அளந்து இந்நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது என கூறி மனுதாரர் ஆணையர் நியமிக்க கோரியுள்ளதில் இருந்தே மனுதாரர் தனது தரப்பு சாட்சியத்தை திரட்டுவதற்காக ஆணையர் நியமிக்க கோரியுள்ளார் என்பது நன்கு துலங்கும் என்றும், அதேபோல் மனுதாரர் இவ்வழக்கில் வா.சா.1 ஆக எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையின்போது குறுக்கு விசாரணையின் 1 வது பக்கத்தில் கீழ் இருந்து மேலாக 12 வது வரியில் "என் வீட்டிலிருந்து சங்குபுரம் 4 ம் தெருவிற்கு சென்றுவர உரிமை உள்ளது என விளம்புகை செய்யக்கோரி நான் இந்த வழக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்லும் தெரு என்பது 1 வது பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என்பதால் தான் அவருக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சங்கரன்கோவில் நகராட்சியை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்" என சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அதேபோல் குறுக்கு விசாரணையின் 2 வது பக்கத்தில் 18 வது வரியில், "என்னுடைய வீட்டின் பின்புறம் உள்ள காம்பவுண்ட் சுவருக்கு வடபுறம்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.17 16:36:00 +0530

வாறுகால் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த வாறுகால் என்னுடைய காம்பவுண்ட் சுவரை ஒட்டியுள்ளது என்றால் சரிதான். வாறுகால் கட்டக்கூடாது என ஆட்சேபணை செய்தேன் ஆனால் அதனை யாரும் கேட்கவில்லை. என்னுடைய வீட்டின் பின்புறம் உள்ள காம்பவுண்ட் சுவரில் 2 அடி அகலத்தில் வாசல் வைத்துள்ளேன் படிக்கட்டு எதுவும் கட்டவில்லை. என்னுடைய காம்பவுண்ட் சுவற்றிற்கு வடபுறம் வாறுகாலுக்கும் காம்பவுண்ட் சுவரில் நான் வைத்துள்ள வாசலுக்கும் இடையில் 3 அடி உயரம் இருக்கும் என்றால் சரிதான்" என சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அதேபோல் குறுக்கு விசாரணையின் 2 வது பக்கத்தில் கீழ் இருந்து மேலாக 2 வது வரியில், "சங்குபுரம் 4 ம் தெரு என்பது தென்வடல் ஓடைக்கு கீழ்புறம் உள்ளது என்றால் சரிதான். சங்குபுரம் 4 ம் தெரு ஓடைக்கு கீழ்புறம் அமைந்துள்ளது என்பது நீதிமன்றத்திற்கு தெரிந்துவிடும் என்பதால் தான் நான் வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்" என சாட்சியம் அளித்துள்ளார் என்றும், ஆனால் மனுதாரர் அளித்துள்ள வாய்மொழி சாட்சியத்திலிருந்தே தாவா சொத்துக்களுக்கிடையே இருப்புதன்மையை இந்நீதிமன்றத்திற்கு தெளிவாக தெரியவரும் நிலையில் மனுதாரர் அளித்துள்ள சாட்சியம் அவர்களுக்கு முரணாக அமையும் என்பதால் அதனை நிவர்த்தி செய்யும் வகையில் சாட்சியங்களை திரட்டும் நோக்குடன் மனுதாரர் ஆணையர் நியமிக்கக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. <u>தீர்வுக்குரிய பிரச்சினை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

5) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, வழக்கு கோப்பு ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன. இருதரப்பு வாதஉரை கேட்கப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.17 16:36:10 +0530

6) இம்மனுவானது மனு தபசில் சொத்தையும், அதனை சுற்றியுள்ள சொத்துக்களின் அமைப்புகளையும், அங்க அடையாளங்களையும் மற்றும் இருப்பு தன்மைகளையும், நீதிமன்ற ஆணையர் உபய தரப்பினர்களுடன் நகர சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு அளந்து இந்நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்துகொள்ள நீதிமன்ற ஆணையர் நியமித்து உத்தரவிட வேண்டி மனுதாரர்/வாதியால் இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மேலும், அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் பிராதின் தபசில் சொத்தில் இருந்து வடக்கே உள்ள சங்குபுரம் 4ம் தெருவுக்கு சென்றுபோய்வரும் உரிமை உண்டு என விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மேலும், அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இந்த பிரதிவாதி இதன் 3ம் தபசில் சொத்திலிருந்து இதன் 2ம் தபசில் சொத்தின் வழியாக சங்குபுரம் 4ம் தெருவினை அடைந்தும், அதேபோல் சங்குபுரம் 4ம் தெருவில் இருந்து இதன் 2ம் தபசில் சொத்தின் வழியாக இதன் 3ம் தபசில் சொத்திற்கு வந்தும், இதன் 2ம் தபசில் சொத்தினை இந்த பிரதிவாதி தனித்த பாதையாக பயன்படுத்தி வருவதற்கு வாதி இடையூறு செய்யும் விதமாக வாதியோ, வாதியின் வாரிசுகளோ, வகையாட்களோ, வேலையாட்களோ, ஏஜெண்டுகளோ இதன் 2ம் தபசில் சொத்தினை சட்டத்திற்கு முரணான வகையில் ஆக்கிரமிப்பு செய்து படிகட்டுவதன் மூலமோ அல்லது கனரக வாகனங்களை நிறுத்துவதன் மூலமோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என வாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்கோரிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) மேலும், அசல் வழக்கில் வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்து வா.சா.1–ஐ பிரதிவாதிகள் தரப்பில் முழுமையாக குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பின்னர் அசல் வழக்கு தற்போது மனுதாரர்/வாதி தரப்பு கூடுதல் சாட்சி விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்/வாதியால் இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.17 16:36:20 +0530

செய்யப்பட்டுள்ளது.

10) மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனுவில் மனு தபசில் சொத்திற்கு அடுத்த வடக்கே 16 அடி அகல பொது சாலை இருந்து வருகிறது என்றும், அந்த சாலை சங்கரன்கோவில் நகராட்சியில் இருந்து சிமெண்ட் கல்தள சாலை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், அந்த சாலையின் தெற்கு ஓரத்தில் தனது வீட்டிற்கு வடபுறம் நகராட்சியால் கழிவு நீர் வாறுகாலும், ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், மேற்படி தெருவில் மின் கம்பங்கள் சாலைகளில் நடப்பட்டு அவைகளில் இருந்து அப்பகுதி வாழ்மக்களின் வீடுகளுக்கு மின் இணைப்புகளும் கொடுக்கப்பட்டு உள்ளது என்றும், மேற்படி கிழமேல் பொது சாலைக்கு சங்கரன்கோவில் நகராட்சியில் சங்குபுரம் 4ம் தெரு எனவும் பெயர் சூட்டப்பட்டுள்ளது என்றும், தன் வீட்டிற்கு தெற்கேயுள்ள கிழமேல் பொதுபாதைக்கு சங்குபுரம் 3ம் தெரு என்று பெயரும் ஏற்பட்டுள்ளது என்றும், மேற்படி தெருக்களையும், தனது வீட்டையும் காண்பிக்கக்கூடிய புகைப்படங்கள் அதற்கான குறுந்தகடும் பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதனை சான்றாவணங்களாக குறியீடு செய்ய இயலவில்லை என்றும், மனு தபசில் சொத்திற்கு அடுத்த வடக்கே 16 அடி அகல பொதுபாதை உள்ளதால், அந்த சாலைக்கு மனு தபசில் சொத்தின் எப்பகுதியில் இருந்தும், சென்றுபோய் வந்து கொள்ளும் உரிமை தனக்கு சட்டப்படி உண்டு என்றும், இவ்வழக்கு சொத்தின் அமைப்பு மற்றும் இருப்புத்தன்மை ஆகியவைகளை நீதிமன்ற ஆணையர் நகர சர்வேயர் உதவி மூலம் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்யும்பட்சத்தில் உண்மை நிலையை இந்நீதிமன்றம் அறிந்து ஒரு நிரந்தரமான தீர்வை மனுதாரர் இந்நீதிமன்றத்தில் பெற இயலும் என்றும், 1ம் எதிர்மனுதாரர் தனது எதிர்வழக்குரை பக்கம், பாரா 14ல் வழக்கு சொத்தின் தற்போதைய இருப்பு தன்மையை பார்வையிட்டால் உண்மைநிலை தெரியவரும் என கூறியுள்ளார் என கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

11) மனுதாரர்/வாதி தரப்பு மனுவை மறுத்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் தனது மனுவில் பாதையை பொறுத்து உரிமை கோரியுள்ள நிலையில் பாதை என்பது மனு தபசில் சொத்தாக இருந்து வரவில்லை என்றும், அவ்வாறு மனு தபசில் சொத்தாக இருந்து வராத இடத்தையும்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.17 16:36:30 +0530

அதேபோல் மனு தபசில் சொத்தாக காட்டப்பட்டுள்ள சுற்றுவட்டார பகுதிகளையும் அளவீடு செய்ய வேண்டும் என்றும் அதற்கு ஆணையர் நியமிக்க வேண்டுமென கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், அதேபோல் மனுதாரர் மனுவில் உரிமை கோருவதாக கூறியுள்ள பாதை என்பது அதாவது சங்குபுரம் 4ம் தெரு என நகராட்சியிலிருந்து வகைப்பாடு செய்யப்பட்டிருப்பதால் அதனை நகர அளவை ஆவணங்கள் மற்றும் வரைபடம் ஆகியவற்றின் மூலம் இந்நீதிமன்றத்தில் நிரூபித்துப் போக சட்டப்படி கடமை இருந்தும், அவ்வாறு ஆவணங்கள் தாக்கல் செய்து தனது வழக்கை நிரூபிக்க சட்டப்படியான வாய்ப்புகள் இருந்தும் அவ்வாறு ஆவணங்கள் தாக்கல் செய்து மனுதாரர் தரப்பில் இவ்வழக்கினை நிரூபிக்காமல் மனுதாரர் தன்னுடைய வழக்கினை வழக்கு சொத்தாக காட்டப்படாத ஒரு சொத்தை பொறுத்து மனுதாரர் தரப்பில் நிரூபிக்கும் வகைக்காக ஆணையர் நியமிக்க கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்றாகும் என்றும், மனுதாரர் அளித்துள்ள வாய்மொழி சாட்சியத்திலிருந்தே தாவா சொத்துக்களுக்கிடையே இருப்புதன்மையை இந்நீதிமன்றத்திற்கு தெளிவாக தெரியவரும் நிலையில் மனுதாரர் அளித்துள்ள சாட்சியம் அவர்களுக்கு முரணாக அமையும் என்பதால் அதனை நிவர்த்தி செய்யும் வகையில் சாட்சியங்களை திரட்டும் நோக்குடன் மனுதாரர் ஆணையர் நியமிக்கக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

12) மேலும், அசல் வழக்கு கோப்பின் பரிசீலனையிலிருந்து, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்கோரிக்கையுடன் கூடிய எதிர்வழக்குரையில் "..........உண்மையில் சங்குபுரம் 4ம் தெரு என்பது இதன் 1, 2 தபசில் சொத்திற்கு கீழ்புறம் உள்ள தென்வடல் ஓடைக்கு கீழ்புறமே இருந்து வருகிறது என்றும், 1ம் தபசில் கண்ட சொத்தின் ஒரு பகுதியான 3ம் தபசில் சொத்தான அடிமனையை கிரையம் பெற்று அவ்வாறு கிரையம் பெறும் காலத்திலேயே இந்த பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த மேற்படி வீராச்சாமி பண்டாரம் வகையறாக்கள் தங்களிடம் கிரையம் பெற்ற நபர்கள் அதாவது இந்த பிரதிவாதி கிரையம் பெற்ற இதன் 3ம் தபசில் சொத்திலிருந்து சங்குபுரம் 4ம்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.17 16:36:39 +0530

தெருவிற்கு சென்று வருவதற்கு ஏதுவாக 3ம் தபசில் சொத்திற்கு தென்புறம் தங்களுக்கு பாத்தியப்பட்ட இதன் 1ம் தபசில் சொத்தின் அடிமனையில் தென்கடைசியில் இதன் 2ம் தபசில் சொத்தான நடைபாதைக்காக மொத்தத்தில் 2 செண்ட் இடம் மட்டுமே ஒதுக்கி அதனையும் மேற்படி பிரதிவாதியின் கிரைய ஆவணமான 20.09.2000ம் தேதிய பதிவு கிரைய ஆவணத்தில் குறிப்பிட்டு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றும், பிரதிவாதி மற்றும் பிரதிவாதியின் மனைவி அடங்கிய குடும்பத்தார் இதன் 3ம் தபசில் கண்ட சொத்தில் குடியிருந்து இதன் 2ம் தபசில் சொத்தின் வழியாக சங்குபுரம் 4ம் தெருவினை அடைந்தும், அதேபோல் சங்குபுரம் 4ம் தெருவிலிருந்து இதன் 2ம் தபசில் சொத்தின் வழியாக 3ம் தபசில் சொத்திற்கு வந்தும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், அதனால் சங்குபுரம் 4ம் தெருவிலிருந்து இதன் 3ம் தபசில் சொத்தினை அடைய இதன் 2ம் தபசில் சொத்தான பாதையை தவிர வேறு பாதை இந்த பிரதிவாதிக்கு எதுவும் கிடையாது என்றும், பிராது தபசில் சொத்து சங்குபுரம் 3ம் தெருவில் இருந்து வருகிறது என்றும், பிராது தபசில் சொத்திற்கு சென்று வரக்கூடிய பிரதான பாதை பிராது தபசில் சொத்திற்கு தென்புறம் உள்ள 16 அடி அகல பாதையான சங்குபுரம் 3ம் தெருவுதான் வாதிக்கு நடந்துபோக உரிமையுள்ள பாதை என்பதும் நன்கு துலங்கும் என்றும், வாதி இதன் 2ம் தபசில் சொத்தினை ஆக்கிரமித்து படிகட்டியும் மற்றும் கனரக வாகனங்களை இதன் 2ம் தபசில் சொத்தில் நிறுத்தும்பட்சத்தில் இதன் 2ம் தபசில் சொத்தினை இதன் 3ம் தபசில் சொத்திற்குரிய பாதையாக இந்த பிரதிவாதி அமைதியான முறையில் அனுபவம் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படும் என்றும், மேலும் இந்த வாதி பிராது தபசில் சொத்திலிருந்து இதன் 2ம் தபசில் சொத்தான பாதை வழியாக சங்குபுரம் 4ம் தெரு வழியாக சென்று வந்து அனுபவம் செய்து வந்ததாக கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆனால் இந்த பிராது தபசில் சொத்தின் தற்போதைய இருப்பு தன்மையினை பார்த்தாலே இந்த வாதி பிராதில் கூறியுள்ளபடி சங்குபுரம் 4ம் தெருவை அடையக்கூடிய இதன் 2ம் தபசில் சொத்தான பாதையினை பயன்படுத்தி வரவில்லை என்பது நன்கு துலங்கும்....." என கட்சி எடுக்கப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.17 16:36:47 +0530

13) மேற்கண்ட பரிசீலனையில் இருந்து, மனுதாரர்/வாதியால் வழக்கு தபசில் சொத்திற்கு வடபுறம் இருப்பதாக கூறப்படும் சங்குபுரம் 4 வது தெரு குறித்து, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் சங்குபுரம் 4 வது தெரு எதிர்கோரிக்கை 1, 2 தபசில் சொத்திற்கு கீழ்புறம் உள்ள தென்வடல் ஓடைக்கு கீழ்புறமாக இருந்து வருகிறது என்றும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் 2ம் தபசில் சொத்தின் வழியாக சங்குபுரம் 4 வது தெருவினை அடைந்து அனுபவித்து வருவதாகவும், வாதிக்கு பாதை சங்குபுரம் 3 வது தெரு என்றும், வாதி எதிர்கோரிக்கை 2ம் தபசில் சொத்தினை ஆக்கிரமித்து படிகட்டி பிரதிவாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்வதாக கட்சி எடுக்கப்பட்டு, சங்குபுரம் 4 வது தெருவின் இருப்பிட அமைப்பு (Physical features) குறித்தும், அதன் அடையாளங்கள் (identification) குறித்தும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

14) சங்குபுரம் 4 வது தெருவின் இருப்பிட அமைப்பு (Physical features) குறித்தும், அதன் அடையாளங்கள் (identification) குறித்தும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை உள்ள நிலையில், அசல் வழக்கின் முழுமையான நீதிமுறை தீர்மானிப்புக்கும், இவ்வழக்கு தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனையை முற்றிலுமாக தீர்க்கவும், மேலும், தரப்பினர்களுக்கிடையே பல்வேறு வழக்குகள் இது தொடர்பாக எழாமல் தடுக்கவும் வழக்கு தபசில் சொத்து, எதிர்கோரிக்கை தபசில் சொத்துக்கள் மற்றும் சங்குபுரம் 3 வது மற்றும் 4 வது தெருவின் இருப்பிட அமைப்பை இந்நீதிமன்றம் அறிய இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட வேண்டியது அவசியம் ஆகும்.

15) இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது போல மனுதார் இம்மனுவை வழக்கு தாக்கல் செய்யப்பட்டு சுமார் 7 ஆண்டுகள் கடந்த பிறகு தற்போது அசல் வழக்கு கூடுதல் வாதி தரப்பு சாட்சி விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டத்தை கருத்தில்கொண்டு, இம்மனுவானது நீதியின் நலன் கருதி நிபந்தனை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.17 16:36:57 +0530

செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தில் தீர்வு காணப்படுகிறது.

16) **இறுதியாக:-**

இம்மனுவானது ரூ.2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 10.10.2025 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 10.10.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.17 16:37:04 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**1. மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை.

**2. எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**:-இல்லை.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.17 16:37:10 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ.நீ.,
சங்கரன்கோவில்,
I.A.No.3/2025
in
O.S.No.199/2017
உத்தரவு (Draft / Fair)
நாள் : 17.09.2025